☎ 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, shanmugacollege@gmail.com www.shanmugacollege.edu.in

## சண்முகா கல்லூரியில்
## தகவலமைப்பு மேலாண்மையியல் துறை சார்பாக
## ஒரு நாள் தேசிய கருத்தரங்கம்

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில், தகவலமைப்பு மேலாண்மையியல் துறை (ம) IQAC சார்பாக நடைபெற்ற தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரங்கம் **"இணைய வழி குற்றத் தடுப்பிற்கான விழிப்புணர்வு"** என்ற தலைப்பில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி,** செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்,** பொருளாளர் **இ.ஸ்ரீதர்,** அறக்கட்டளை உறுப்பினர் **சி.ரவிக்குமார்,** கல்விப்புல முதன்மையர் பேராசிரியர் **அழ.உடையப்பன்** மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தகவலமைப்பு மேலாண்மையியல் துறைத்தலைவர் **எஸ்.சம்பத்ராஜன்** அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக இணையவழி குற்றத்தடுப்பு தொழில்நுட்ப ஆய்வாளர் திருமதி.**கே.பாரதி** அவர்கள் பங்கேற்று இணையவழி குற்றங்களைக் கண்டுபிடிப்பது, குற்றங்களை களைவதற்கான வழிமுறைகள் மற்றும் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியில் நாம் எவ்வாறு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்று எடுத்துரைத்தார். மேலும், இந்நிகழ்ச்சியில் இணையவழி குற்றத்தடுப்பு தொழில்நுட்ப உதவி ஆய்வாளர் திரு.**டி.செந்தில்குமார்** அவர்கள் நவீன இணைய வழி செயலிகளை கையாளும்போது மிகுந்த கவனத்துடன் இருப்பது பற்றி விளக்கப்படத்துடன் மாணவர்களுக்கு விளக்கினார். நிகழ்ச்சியின் நிறைவாக பல்வேறு கல்லூரிகளிலிருந்து போட்டிகளில் பங்கேற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கி சிறப்பு செய்தனர். தகவலமைப்பு மேலாண்மையியல் துறை உதவிப்பேராசிரியர் **எம்.ஜெயமுருகன்** நன்றியுரையாற்றினார்.

இந்நிகழ்வில் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், பல்வேறு கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துறைப்பேராசியர்கள் **பி.அண்ணாமலை, எஸ்.ரேகா, எம்.பிரபு, ஆர்.சத்யா, வி.சுந்தர்** மற்றும் **ஆர்.சதீஷ்குமார்** உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

செயலர் மற்றும் தாளாளர்



SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE
Department of ISM & IQAC Organizing
INFOCRACY - 23
Awareness of Cyber Security on Techno Lane
Date: 16 Feb 2023, Venue: College Auditorium
ISM


SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE
Department of ISM & IQAC